IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

OS No. 192/2022

**P.W.2**

| | |
|---|---|
| Name | : மோகன் |
| Father/Husband Name | : ஐசக் |
| Place | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 67 |
| Date | : 26-11-2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025.

சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>

2. வாதி என்னுடைய மனைவி. நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் தாவா சொத்து அமைத்துள்ள பையனூர் கிராமம் என்றால் சரிதான். பிரதிவாதியும் அதே கிராமத்தைச் சேர்ந்தவர் தான். பிரதிவாதியின் அப்பா செல்வராஜ் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது பிரதிவாதி என்றாலும் அவர் அருகில் நிற்பது அவரது அப்பா செல்வராஜ் என்றால் சரிதான். மேற்கண்ட புகைப்படம் பி.சா.ஆ. 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.(மேற்கண்ட புகைப்படம் உரிய சான்றிதழ் படி தாக்கல் செய்யப்படாததால் அதனை குறியீடு செய்ய அனுமதிக்க கூடாது என செய்யப்பட்ட ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

3. செல்வராஜின் தந்தை பெயர் முத்தன் என்றால் சரிதான். செல்வராஜின் மனைவி மற்றும் அவரது குடும்பத்தார் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் எனக்கு அவ்வளவாக தெரியாது. தாவா சொத்து அமைந்துள்ள இடத்தின் அருகில் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். நான் ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை பொது அதிகார முகவர் என்ற வகையில் வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்த செல்வராஜ் அந்த ஆவணத்தை எழுதியபோது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அந்த பொது அதிகார ஆவணம் சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் என் வசம் அப்போது ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. பொது அதிகார ஆவணத்தின் அசல் ஆவணமும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அசல் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என் கைவசம் தான் உள்ளது என்றால் இல்லை. தொலைந்து விட்டது. அந்த ஆவணம் தொலைந்து போனது சம்பந்தமாக நான் சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ல் பக்கம் ஆறில் உள்ள சொத்து விவரத்தில் புல எண். 327/3 என்று உள்ளது என்றால் சரிதான். அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த புல எண். 327/3 என்பது தவறாக உள்ளது என்பது தெரிய வந்தவுடன் என்னுடைய பொது அதிகார முதல்வர் பிழை திருத்தல் ஆவணம் ஏதேனும் ஏற்படுத்திக் கொடுத்தாரா என்றால் இல்லை.

5. நான் அது சம்பந்தமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் பேசியபோது அவ்வாறு பிழை திருத்தல் ஆவணம் ஏற்படுத்த முடியாது என்றும் பொது அதிகார ஆவணத்தை தான் ரத்து செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார்கள். எனவே வா.சா.ஆ. 1 ஐ ரத்து செய்து புதிய பொது அதிகார ஆவணம் எழுதி பெற்றேனா என்றால் இல்லை. அந்த பொது அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண் சொத்தை மட்டும் தான் நான் கிரயம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் எனக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்த முதல்வரின் குடும்ப அட்டை எண்ணும் குறிப்பிடப்பட்டு அதன் நகலும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் நகலை எனக்கு கொடுத்தாரா என்றால் அவ்வாறு கொடுக்கும் பழக்கம் இல்லை. நான் அந்த குடும்ப அட்டை நகலை கேட்டு பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை.

6. பொது அதிகார ஆவணத்தில் யாரெல்லாம் சாட்சி கையொப்பம் செய்தது என்றால் சேகர். மற்றொருவர் பெயர் நினைவில்லை. எனக்கு பொது அதிகாரம் கொடுத்த முதல்வர் தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணம் முத்தன் என்பவரின் மகன் செல்வராஜ் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ல் சி. செல்வராஜ் என்று கையொப்பமிட்டுள்ளார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அது எஸ் போலவும் சி போலவும் காணப்படுகிறது. பொதுவாக இந்த நபர் கையொப்பமிடும்போது தன்னுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்தைத் தான் தங்கள் பெயரின் முன்பாக போடுவார்கள் என்றால் சரிதான்.

7. எனக்கு பொது அதிகாரம் வழங்கிய செல்வராஜ் என்பவரின் தந்தை பெயர் சின்ன குழந்தை என்றாலும் அதன் காரணமாகத்தான் அவர் தன்னுடைய பெயருக்கு முன்பாக சி என குறிப்பிட்டு கையொப்பமிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. முத்தன் மகன் செல்வராஜ் என்பவர் பையனூர் கிராமத்தில் தான் வசித்து வந்தார் என்றாலும் அவர் தண்டலம் கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் சி. செல்வராஜ் என்பவரும் சேர்ந்து போலியாக பொது அதிகார ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த பொது அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண்.1171 என் வசம் தான் உள்ளதா என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

8. நான் அந்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ல் உள்ள செல்வராஜ் என்பவர் முத்தன் மகன் செல்வராஜ் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தின் உரிமையாளர் அவர்தான். எனக்கு பொது அதிகாரம் ஆவணம் எழுதிக் கொடுத்த நபரின் பெயரில் உள்ளது கூட்டு பட்டாவா தனிப்பட்டவா என்றால் கூட்டு பட்டா தான். அந்த கூட்டு பட்டா யார் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பரந்தாமன் மற்றும் செல்வராஜ் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பரந்தாமன் பையனூர் கிராமத்தை சேர்ந்தவரா என்றால் எனக்கு தெரியாது. நான் அவரை பார்த்ததில்லை. நான் என் மனைவிக்கு கிரயம் கொடுத்த வா.சா.ஆ.2 ல் சொத்து விவரத்தில் நான் பொது அதிகார ஆவணம் பெற்ற புல எண் 327/3 குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தட்டச்சுப் பிழை காரணமாக 327/3 என்று பொது அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது

அதிகார ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து ஆவணங்களிலும் 327/2 என்றுதான் அந்த சொத்தின் புல எண் காணப்படுகிறது.

9. அவ்வாறு தட்டச்சுப் பிழை ஏற்பட்டுள்ளது என்பது குறித்து நான் கிரையம் கொடுத்த வா.சா.ஆ. 2 ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. புல எண். 327/2 சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்றாலும் அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக சி. செல்வராஜ் நானும் என் மனைவியும் சேர்ந்து மேற்கண்ட ஆவணங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. நானும் என் மனைவியும் போலியான ஆவணங்களை ஏற்படுத்தியதாக பிரதிவாதி காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தாரா என்றால் சரிதான். போலீசார் எங்களை விசாரணை செய்துவிட்டு எங்கள் ஆவணங்களையும் சரி பார்த்து விட்டு எங்கள் ஆவணங்கள் சரியாக உள்ளது என்று எங்களை அனுப்பி விட்டார்கள்.

10. போலீசார் விசாரணைக்கு நாங்கள் செல்லவில்லை என்றாலும் அந்த விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முத்தன் மகன் செல்வராஜ் கடந்த 28/06/2004 அன்றே இறந்துவிட்டார் என்றாலும் அவரது பெயரை மோசடியாக பயன்படுத்தி மேற்கண்ட ஆவணத்தை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ல் பக்கம் 2 ல் என் பெயரில் ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதாக மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் அந்த சொத்துக்கள் சம்பந்தப்பட்ட

அசல் ஆவணங்கள் அனைத்தையும் கிரையம் பெற்றவரிடம் ஒப்படைத்து விட்டதாக வாசகங்கள் ஏதும் காணப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை ஆவண எழுத்தர் தான் அவ்வாறு எழுதியுள்ளார்.

11. உண்மையில் எனக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தவர் பெயரில் ஆவணங்கள் இருந்திருந்தால் அந்த ஆவணங்களை நான் என் மனைவிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் அந்த அசல் ஆவணங்களை ஒப்படைப்பதாக குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்தி உள்ள பொது அதிகார ஆவணம் மோசடியான ஆவணம் என்பதால் தான் தாவா சொத்து அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் வேறு சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன் என்றால் அந்த காலத்தில் பொது அதிகார ஆவணத்தை எங்கு வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். நான் கூடுவாஞ்சேரியில் வசிப்பதால் அங்கு பதிவு செய்துள்ளேன்.

12. 2005 – 2006 காலத்தில் நான் திருப்போரூர் இந்தியன் வங்கி கிளையில் பணிபுரிந்தேன் என்றால் சரியல்ல. நான் கேரளாவில் பணிபுரிந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய பொது அதிகார முதல்வர் இறந்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. 2015 ஆம் ஆண்டு இறந்ததாக சொல்கிறார்கள். நான் பொது அதிகார ஆவணம் பெற்ற இரு மாதங்களில் என் மனைவியின் பெயருக்கு கிரைய ஆவணம் எழுதி

கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் சேர்ந்து மோசடியாக ஏற்படுத்திய வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 ஆகியவற்றின் அடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும் அவர்தான் அதை ஆண்ட அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

13. பிரதிவாதி அத்துமீறி பிரவேசித்ததாக காவல் நிலையத்தில் நானும் என் மனைவியும் புகார் கொடுத்தோமா என்றால் என் மனைவி பெயரில் நான் புகார் கொடுத்தேன். அந்த புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எவ்வித புகார் கொடுக்கப்படாதால்தான் அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என் மனைவிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் பிரதிவாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றாலும் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் தந்தை செல்வராஜ் என்பவரின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல.

14. அந்த சொத்து அவருக்கு சொந்தமானது இல்லை. அந்த சொத்து பூர்வீக சொத்து என்பதால் செல்வராஜின் வாரிசுகளுக்கு அது பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனவே என் மனைவி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பதிலுரையில் குறிப்பிட்டது போன்று நான் என் மனைவிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது

அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி கோரிய படி எதிரிடை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

S/d- K.Nilavarasan, 26.11.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.